**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**2023–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நிறைவேற்று மனு எண்.20/2023**

**உள்**

**அசல் வழக்கு எண்.360/2022**

**(CNR No.TNDG19-000128-2023)**

**----**

K. செல்வராஜ் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

K. நாட்ராயன் ...... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 06.03.2023 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.20/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் கடந்த **07.10.2023**–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.சி.ஜெகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** மனு அட்டவணை சொத்துக்களை பற்றுகை செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்ய ஆணையிடக்கோரி இம்மனு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 21 விதி 54 மற்றும் விதி 66–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம். :–**

மனுதாரர், அசல்வழக்கு எண்.360/2022–யை எதிர்மனுதாரர் மீது கடனை திருப்பி செலுத்த உத்தரவிட கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல்வழக்கில் கடந்த 08.12.2022 ஆம் தேதி எதிர்மனுதாரர், வழக்கு தொகையையும், பின்வட்டியையும் மனுதாரருக்கு திரும்பி செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், தீர்ப்பாணை தொகை மற்றும் பின்வட்டியையும் மனுதாரருக்கு செலுத்தவில்லை. எனவே எதிர்மனுதாரருக்கு சொந்தமான மனு அட்டவணை சொத்துக்களை பற்றுகை செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்ய கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனு உரையின் சுருக்கம்:–**

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் நிறைவேற்று மனுவில் கோரியுள்ள தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர், திருச்சி கூடுதல் சார்பு நீதிமன்றத்தால் நொடிப்புநிலை மனு எண்.46/2015–இன்படி கடந்த 02.12.2021 ஆம் தேதி நொடிப்புநிலை அடைந்தவர் என விளம்புகை செய்யப்பட்டுள்ளார் என்றும், நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது அல்ல எனவும், எனவே நிறைவேற்று மனுவினை தள்ளுபடி செய்து வேண்டி எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு அட்டவணை சொத்துக்களை பற்றுகை செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்ய மனுவை அனுமதித்து உத்தரவிடலாமா? என்பதே ஆகும்.

**<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த நிறைவேற்று மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரை பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரர், அசல்வழக்கு எண்.360/2022–யை எதிர்மனுதாரர் மீது கடன் தொகையை திருப்பி செலுத்த உத்தரவிட கோரி தாக்கல் செய்து கடந்த 08.12.2022 ஆம் தேதி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி எதிர்மனுதாரர், தீர்ப்பாணை தொகையை மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டும், ஓராண்டு கடந்த பின்னரும் தீர்ப்பாணை தொகையை மனுதாரருக்கு திரும்பி செலுத்தவில்லை, எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தன்னை நொடிப்புநிலை எய்தியவராக விளம்புகை செய்யப்பட்டுள்ளார் என்றும், நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டு சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியமில்லை என்று குறிப்பிட்டு எதிர்மனுஉரை தாக்கல் செய்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் தான் நொடிப்புநிலை அடைந்தவர் என விளம்புகை செய்யப்பட்டுள்ளது குறித்தும், நிறைவேற்று மனுவில் கண்ட சொத்து அவருக்கு பாத்தியமில்லை என்பது குறித்தும் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அவர் ஆஜராகி தன்னை முதல்விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியங்களுக்குட்படுத்திக்கொள்ளவில்லை. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவொரு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவுடன் கணிணிப்பட்டா தாக்கல் செய்துள்ளார். மேற்படி கணினிப்பட்டா சர்வே எண்.153/5A, 0.26.00 ஹெக்டேர்

நிலம் எதிர்மனுதாரர் நாட்ராயன், த/பெ.சின்னக்காளியப்பன் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிசீலனையில் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டுள்ளது என இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. எனவே எதிர்மனுதாரர் தீர்ப்பாணை தொகையை செலுத்தாமலேயே காலதாமதம் செய்து வருகிறார் என்பது இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே தீர்ப்பாணையின் பலன் மனுதாரருக்கு கிடைக்க ஏதுவாக மனு அட்டவணை சொத்தை பற்றுகை செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்வது அவசியமான ஒன்று என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மனுதாரர் நிறைவேற்று மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**7.** முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு மனு அட்டவணை சொத்தை பற்றுகை செய்து பொது ஏலத்தில் விற்பனை செய்து உத்தரவிடப்படுகிறது. ஏலத்தில் விற்பனை செய்த பணத்திலிருந்து மனுதாரருக்கு தீர்ப்பாணை தொகையை செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. பற்றுகை படி செலுத்த மூன்று நாட்கள் காலஅவகாசம் வழங்கப்படுகிறது. அழைக்க நாள் 01.12.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 30 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2023.10.30 17:47:19 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

<u>**மனுதாரர் மற்றும் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்:–இல்லை**</u>

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2023.10.30 17:47:23 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.